
தனிப்பிரதி ரூ.5/
ஆண்டு சந்தா ரூ.50/

# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்

THE WORD OF CHRIST



கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே
சகல ஞானத்தோடும் பரிபூரணமாக
வாசமாயிருப்பதாக


கொலோசெயர் 3:16

ஆசிரியர்
**B. அர்ஜூனன்**

மரம் 8 நவம்பர் - 2008 கனி 12


## இவருக்குச் செவி கொடுங்கள் [லூக்.9:35- தேவன்]

**நானே**
**வழியும்**
**சத்தியமும்**
**ஜீவனுமாயிருக்கிறேன்**
**(யோவா.14;6-இயேசு)**




- இரட்சிப்பின் விஷயத்தில்
  - கிறிஸ்து சொல்வதைக் கேட்போம்!
- கோட்ப்பாட்டின் விஷயத்தில்
  - கிறிஸ்து சொல்வதைக் கேட்போம்!
- ஐக்கியத்தின் விஷயத்தில்
  - கிறிஸ்து சொல்வதைக் கேட்போம்!
- அதிகாரத்தின் விஷயத்தில்
  - கிறிஸ்து சொல்வதைக் கேட்போம்!
- ஆராதனை விஷயத்தில்
  - கிறிஸ்து சொல்வதைக் கேட்போம்!
- சபையின் விஷயத்தில்
  - கிறிஸ்து சொல்வதைக் கேட்போம்!
- நித்தியத்தின் விஷயத்தில்
  - கிறிஸ்து சொல்வதைக் கேட்போம்!

# கிறிஸ்துவின் வசனம்



## வழங்கும்



## தொலைக்காட்சி நிகழ்ச்சி

தமிழன் டிவியில் திங்கள் காலை 6.00 - 6.15
இமயம் டிவியில் செவ்வாய் காலை 6.30 - 6.45
இமயம் டிவியில் வியாழன் காலை 6.15 - 6.30

## பார்த்து சத்தியத்தை அறிந்துகொள்ளுங்கள்

"Go ye into all the world, and preach the gospel to every creature"
Mark 16:15.
"The Churches Of Christ salute you" Romans 16:16

**Published by**
WORLD LITERATURE PUBLICATIONS
Post Box No. 5, Batlagundu - 624 202.
SOUTH INDIA.

# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்

## THE WORD OF CHRIST


புதிய ஏற்பாட்டு தூய கிறிஸ்தவ மாத இதழ்

மரம் - 8 நவம்பர் - 2008 கனி - 12


ஆசிரியருரை

## கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார்

## Christ Lives In Me



கிறிஸ்துவே நமக்குள் பிழைத்திருப்பதற்கு நாம் செய்ய வேண்டுவதென்ன? முதலாவது கிறிஸ்துவுடனேகூட சிலுவையிலறையப்பட வேண்டும். அது எப்படி முடியம் என்று நீங்கள் கேட்பீர்கள். பவுல் இப்படியாக சொல்லுகிறார்: "நீங்கள் கிறிஸ்துவுடனேகூட உலகத்தின் வழிபாடுகளுக்கு மரித்ததுண்டானால், இன்னும் உலக வழக்கத்தின்படி பிழைக்கிறவர்கள்போல, மனுஷருடைய கற்பனைகளின்படியும் போதனைகளின்படியும் நடந்து: தொடாதே, ருசிபாராதே, தீண்டாதே என்கிற கட்டளைகளுக்கு உட்படுகிறதென்ன? இவையெல்லாம் அநுபவிக்கிறதினால் அழிந்துபோகுமே. இப்படிப்பட்ட போதனைகள் சுய இஷ்டமான ஆராதனையையும், மாயமான தாழ்மையையும், சரீர ஒடுக்கத்தையும் பற்றி ஞானமென்கிற பேர்கொண்டிருந்தாலும், இவைகள் மாம்சத்தைப் பேணுகிறதற்கே ஒழிய மற்றொன்றிற்கும் பிரயோஜனப்படாது" என்கிறார் (கொலோ.2:20-23). அப்படியானால் பாரம்பரிய வழிபாடுகளுக்கு நீங்கள் மரித்தவர்களாக இருக்கின்றீர்களா? அல்லது பாரம்பரிய பழக்கவழக்கங்கள் இன்னும் உங்களுடைய வாழ்க்கையில் இருக்கிறதா? இவைகள் எல்லாம் மாம்சத்தைப்பேணுகிறதற்கே ஒழிய மற்றொன்றிற்கும் பிரயோஜனப்படாது. நாம் கிறிஸ்துவோடு பிழைத்திருப்பதற்கு சுயஇஷ்டமான போதனைகளையும், மனுஷருடைய கற்பனைகளையும் புறம்பே தள்ளவேண்டும்.

"இப்படியிருக்க, ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புதுச்சிருஷ்டியாயிருக்கிறான்; பழையவைகள் ஒழிந்துபோயின, எல்லாம் புதிதாயின" என்ற 2கொரி.5:17-ன்படி அவனுடைய வாழ்வு ஒரு

புதுவாழ்வாக இருக்க, பழையவைகள் எல்லாம் முற்றிலும் அழிக்கப்படவேண்டும். பாருங்கள்: பவுலுடைய வார்த்தையைக் கேட்டவர்களில் "....அநேகர் வந்து, தங்கள் செய்கைளை வெளிப்படுத்தி அறிக்கையிட்டார்கள். மாயவித்தைக்காரரா யிருந்தவர்களில் அநேகர் தங்கள் புஸ்தகங்களைக் கொண்டுவந்து, எல்லாருக்கு முன்பாகச் சுட்டெரித்தார்கள்; அவைகளின் கிரயத்தைத் தொகைபார்த்து, ஐம்பதினாயிரம் வெள்ளிக்காசாகக் கண்டார்கள். இவ்வளவு பலமாய்க் கர்த்தருடைய வசனம் விருத்தியடைந்து மேற்கொண்டது" (அப்.19:18-20). கர்த்தருடைய வசனத்தை ஏற்றுக்கொண்ட இந்த மாயவித்தைக்காரர்கள் ஐம்பதினாயிரம் வெள்ளிக்காசுக்கு தங்களுடைய மாயவித்தை சம்பந்தமான புத்தகங்களை விற்பனை செய்திருக்கலாம். ஆனால் அவர்கள் அப்படிச்செய்யாமல் தாங்கள் இவ்வளவு காலமாக ஏமாற்றப்பட்டும், மற்றவர்களையும் ஏமாற்றிக்கொண்டும் வந்த அந்த பாரம்பரிய கட்டுகளை சுட்டெரிக்க யோசிக்கவில்லை, அவைகளை உடனே சுட்டெரித்துப்போட்டார்கள். நாம் அவரோடுகூட சிலுவையில் அறையப்பட சுயம் சுட்டெரிக்கப் படவேண்டும்.

"இந்த வார்த்தை உண்மையுள்ளது; என்னவெனில், நாம் அவரோடுகூட மரித்தோமானால், அவரோடேகூடப் பிழைத்து மிருப்போம்;"(2தீமோ.2:11). நீங்கள் அவரோடுகூட மரித்தவர்களாக இருக்கின்றீர்களா? நானும் எனது நண்பனும் ஒரு முறை சிலுவையில் மரிக்கும்படியாக திட்டமிட்டோம். நாங்கள் சத்தியத்தை அறியாத நாட்களில் இவ்விதமாக முடிவு எடுத்தோம். பின்பு தேவனால் வசனத்தின் மூலம் எச்சரிக்கப்பட்டு நாம் கிறிஸ்தவர்களாக வாழவேண்டும் என்று தீர்மானித்து, இன்றுவரை அவர் எங்களில் பிழைக்கும்படியாக வாழ்ந்துவருகிறோம். ஆகையால் அன்பானவர்களே, உலகவழிபாடுகளுக்கு மரித்தவர்களாகவும், கிறிஸ்துவோடு வாழும்படியாக பிழைத்தவர்களாகவும் உங்களை எண்ணிக்கொள்ளுங்கள். "கிறிஸ்துவினுடையவர்கள் தங்கள் மாம்சத்தையும் அதின் ஆசை இச்சைகளையும் சிலுவையில் அறைந்திருக்கிறார்கள்" (கலா.5:24). எது சிலுவையில் அறையப்படவேண்டும்? ஒரு கிறிஸ்தவனை பாவத்திற்கு கொண்டு செல்லும் அவனுடைய மாம்சத்தின் இச்சை. அதை, அவன் முதலாவது சிலுவையில் அறையவேண்டும். நீங்கள் உங்கள் மாம்சத்தையும் அதின் ஆசை இச்சைகளையும் சிலுவையில் அறைந்திருக்கிறீர்களா?

கிறிஸ்துவோடுகூடச் சிலுவையில் அறையப்பட்ட பவுல் இப்படியாக தொடர்ந்து சொல்லுகிறார். "...ஆயினும், பிழைத்திருக்கிறேன்; இனி நான் அல்ல, கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார்..." என்கிறார் (கலா.2:20). கிறிஸ்துவோடு மரித்த

ஒவ்வொருவரும் அவரோடு பிழைத்திருக்கிறார்கள். அவர்கள் அல்ல அவர்களுக்குள் கிறிஸ்துவே பிழைத்திருக்கிறார். அதுவே உண்மை. அன்பானவர்களே, கிறிஸ்துவோடுகூட மரித்து பின்பு பிழைத்திருந்தால் இனி நான் அல்ல என்றே சொல்லுங்கள். அவ்விதமாக உங்களுடைய ஆவி ஆத்துமா சரீரத்தை அவருக்கு ஒப்புக்கொடுங்கள் அவர் உங்களுடைய சரீரமாக இருக்கட்டும். "நாம் அவருடைய சரீரத்தின் அவயவங்களாயும், அவருடைய மாம்சத்திற்கும் அவருடைய எலும்புகளுக்கும் உரியவர்களாயும் இருக்கிறோம்" (எபே.5:30). அவருக்கு உரியவைகளாகிய உங்களுடைய மாம்சத்தையும் எலும்புகளையும் அவர் ஆண்டு கொள்ள அவருக்கு ஒப்புக்கொடுங்கள். நீங்கள் ஒரு இடத்திற்கு கடந்து செல்லும்போது உங்கள் மூலமாக கிறிஸ்து வெளிப்படவேண்டும். இதுகுறித்து பவுல் கொரிந்து சபைக்கு எழுதிய கடிதத்தில் வாசிக்கிறோம். "கிறிஸ்துவுக்குள் எப்பொழுதும் எங்களை வெற்றிச்சிறக்கப்பண்ணி, எல்லா இடங்களிலேயும் எங்களைக் கொண்டு அவரை அறிகிற அறிவின் வாசனையை வெளிப்படுத்துகிற தேவனுக்கு ஸ்தோத்திரம். இரட்சிக்கப்படுகிறவர்களுக்குள்ளேயும், கெட்டுப்போ கிறவர்களுக் குள்ளேயும், நாங்கள் தேவனுக்குக் கிறிஸ்துவின் நற்கந்தமா யிருக்கிறோம்" என்கிறார் (2கொரி.2:14,15). நீங்கள் எப்படிப்பட்டவரா யிருக்கிறீர்கள்? உங்கள் மூலமாக தேவனுடைய நாமம் மகிமைப்பட வேண்டும். மகிமையான கிறிஸ்துவின் சுவிசேஷத்தின் வாசனை வெளிப்படவேண்டும். நாங்கள் தேவனுக்குக் கிறிஸ்துவின் நற்கந்தமாயிருக்கிறோம். நாம் வாழக்கூடிய இடங்களில் குறிப்பாக, இரட்சிக்கப்படுகிறவர்களுக்குள்ளேயும், கெட்டுப்போகிறவர் களுக்குள்ளேயும் இப்படிப்பட்ட நற்கந்தமாக விளங்கவேண்டும். அதுமாத்திரமல்ல, பவுலைப்போல கர்த்தராகிய இயேசுவினுடைய அச்சடையாளங்களை நாம் தரித்தவர்களாக இருக்கவேண்டும்.

அப்படியென்றால், அவரிடத்தில் காணப்பட்ட அன்பு நம்மிடத்திலும் காணப்படவேண்டும். இயேசு சொல்கிறார்: "நான் அன்பாயிருக்கிறதுபோல நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருக்க வேண்டுமென்பதே என்னுடைய கற்பனையாயிருக்கிறது" என்றார் (யோவா.15:12). அவரை தரித்துக்கொண்ட ஒரு கிறிஸ்தவன் அவருடைய கற்பனையின்படி அன்பாயிருக்கவேண்டும். மேலும் பவுல்: "...நான் இப்பொழுது மாம்சத்தில் பிழைத்திருக்கிறதோ, என்னில் அன்புகூர்ந்து எனக்காகத் தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்த தேவனுடைய குமாரனைப்பற்றும் விசுவாசத்தினாலே பிழைத்திருக்கிறேன்" என்கிறார் (கலா.2:20). நீங்கள் யாருக்காக பிழைத்திருக்கிறீர்கள்? சிலர் தங்களுடைய பிள்ளைகளுக்காக உயிர்வாழ்வதாக சொல்லுகிறார்கள். சிலர் தாங்கள் நேசிக்கிற விலங்குகளுக்காக வாழ்வதாக சொல்கிறார்கள். இப்படி பலர்

பலவிதமாக சொல்லுகிறார்கள். இச்செய்தியை வாசிக்கிற அன்பான சகோதரனே, சகோதரியே நீ யாருக்காக இப்பூமியில் வாழ்ந்து கொண்டிருக்கிறாய்? பவுல், என்னில் அன்புகூர்ந்து எனக்காகத் தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்த தேவனுடைய குமாரனைப்பற்றும் விசுவாசத்தினாலே பிழைத்திருக்கிறேன் என்கிறார். இதையே, காலத்தியருக்கு எழுதும்போது "...விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான் என்று எழுதியிருக்கிறதே" என்கிறார் *(கலா.3:11)*. அந்தப்படியாக ஆபிரகாம் தேவனை விசுவாசித்தான் அது அவனுக்கு நீதியாக எண்ணப்பட்டது. உங்களுடைய விசுவாசம் எத்தகையது? தேவனுடைய குமாரனைப்பற்றும் விசுவாசத்தினாலே ஒருவன் பிழைக்கமுடியும்.

கஷ்டங்கள், பிரச்சனைகள் வந்தவுடன் மனிதன் மரணத்தை விரும்புகிறான் அல்லது அதைத் தேடிக்கொள்கிறான். அவனுக்கோ மனந்திரும்ப மனதில்லை. வேதம் சொல்கிறது: "மனந்திரும்புங்கள், அப்பொழுது பிழைப்பீர்கள்; சாகிறவனுடைய சாவை நான் விரும்புகிறதில்லை என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார்" *(எசேக்.18:32)*. கொடைக்கானல் மலைப்பகுதியில் உள்ள தற்கொலை பாறை (Suicide Point) என்ற இடத்தில் அநேகர் தற்கொலை செய்து கொள்கிறார்கள். என்ன காரணம்? இத்தோடு எல்லாம் முடிந்து விட்டது, நம்மை நேசிக்க யாரும் இல்லை, இந்த உலகத்தில் இருப்பதைவிட மரிப்பதே மேல் என்று முடிவு எடுத்து தங்களை மாய்த்துக் கொள்கிறார்கள். இப்படிப்பட்ட மனிதனும், மனுஷியும் மனந்திரும்ப வேதம் எதிர்பார்க்கிறது. நான் தேவனுக்கு விரோதமாக என்ன காரியம் செய்யதுணிந்தேன்? ஏன் எனக்கு இந்த அவலநிலை என்று சொல்லி மனந்திரும்பும்போது, இரட்சிப்பின் வழியை கர்த்தர் அவர் களுக்குக் காண்பிப்பார்.


தாவீது சொல்கிறார்: "நான் சாவாமல், பிழைத்திருந்து, கர்த்தருடைய செய்கைகளை விவரிப்பேன்" *(சங்.118:17)*. கர்த்தர் நமக்கு செய்த நன்மைகளை எண்ணிப்பார்ப்போமானால், காலம் போதாது. அவ்வளவாய் நமக்கு நன்மை செய்திருக்கிறார்! இப்பொழுதும் செய்துகொண்டும் இருக்கிறார் . இதை யாரும் மறுக்கமுடியாது. அன்பானவர்களே, நாம் இருப்பதே தேவனுடைய சுத்த கிருபை. ஒவ்வொருநாளும் அவருடைய கிருபையால் வாழ்கிறோம். ஆகாய விரிவு அவருடைய கரத்தின் கிரியைகளை நமக்கு அறிவிக்கிறது. ஒவ்வொன்றும் தேவனுடைய வல்லமைகளை வெளிப்படுத்துகிறது. தேவனால் சிருஷ்டிக்கப்பட்ட நாமும் அவருடைய அதிசயங்களை விவரிக்கவேண்டாமா? தாவீது இஸ்ரவேலின் இரண்டாவது ராஜா அவன் பாடும்போது 'ராஜாவாகிய என் தேவனே, உம்மை உயர்த்தி,

உம்முடைய நாமத்தை எப்பொழுதும் என்றென்றைக்கும் ஸ்தோத்திரிப்பேன்' என்கிறார். அவர் ஒரு ராஜாவாக இருந்தபோதும் தனக்குமேல் ஒரு ராஜா இருக்கிறார் என்பதை அறிந்தவராய் ராஜாவாகிய என் தேவனே என்று பாடுகிறார். ஆகையால் தான் பவுலும்கூட "கர்த்தராகிய இயேசுவினுடைய ஜீவனும் எங்கள் சரீரத்திலே விளங்கும்படிக்கு, இயேசுவின் மரணத்தை எப்பொழுதும் எங்கள் சரீரத்தில் சுமந்து திரிகிறோம்" என்றார் (2கொரி.4:10). இயேசு நம்முடைய பாவத்தை சிலுவையில் சுமந்து தீர்த்தார். இதை அறிந்த அப்போஸ்தலர்கள் அவருடைய மரணத்தை சுமப்பதில் சோர்ந்துபோகாமல் சுமந்துதிரிந்தனர். இச்செய்தியை வாசிக்கிற நீங்களும் நானும் இயேசுவை சுமக்க ஆயத்தமாவோம். அப்பொழுது அவர் நமக்குள்ளே பிழைத்திருப்பார்.

**நம்மை நாமே கேட்டுக்கொள்வோம்: 1.** கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருந்தால், **நான் பிரிந்திருக்கலாமா?** கிறிஸ்து பிரிந்திருக்கிறாரா? -(1கொ.1:13). **2.** கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருந்தால், **நான் என்னிடம் வருவோரை புறம்பாக்கலாமா?** இயேசு சொல்கிறார்: என்னிடத்தில் வருகிறவனை நான் புறம்பே தள்ளுவதில்லை -(யோவா.6:37). **3.** கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருந்தால், **நான் பாவம் செய்யலாமா?** அவர் பாவம் செய்யவில்லை, அவருடைய வாயிலே வஞ்சனை காணப்படவுமில்லை - (1பேது.2:22). **4.** கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருந்தால், **நான் மற்றவர்களுக்கு தீமைசெய்யலாமா?** அவர் நன்மைசெய்கிறவராயும்,... -(அப்.10:38). **5.** கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருந்தால், **நான் என்னைத்தானே தாழ்த்தாமல் இருக்கலாமா?** அவர் மனுஷரூபமாய்க் காணப்பட்டு மரண பரியந்தம் -(பிலி.2:8). **6.** கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருந்தால், **நான் வியாதியுள்ளவர்களைக் கண்டு மனதுருகாமலிருக்கலாமா?** இயேசு திரளான ஜனங்களைக் கண்டு அவர்கள் மேல் மனதுருகி -(மத்.14:14). **7.** கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருந்தால், **நான் பிசாசை ஜெயிக்காமலிருக்கலாமா?** இயேசு: அப்பாலே போ சாத்தானே - என்றார் (மத்.4:10). கிறிஸ்துவே நமக்குள் பிழைத்திருந்தால், **நாம் ஒரு வெற்றியுள்ள கிறிஸ்தவனாக வாழமுடியும்.** "குமாரனை உடையவன் ஜீவனை உடையவன், தேவனுடைய குமாரன் இல்லாதவன் ஜீவன் இல்லாதவன்" என்று வேதம் போதிக்கிறது (1யோவா.5:12). நீங்கள் குமாரனை (கிறிஸ்துவை) உடையவர்களாக இருக்க அவருடைய கற்பனைக்குக் கீழ்ப்படிந்து அவரை ஏற்றுக்கொள்ளுங்கள் அப்பொழுது அவர் உங்களில் பிழைப்பார்.

# நீங்கள் ஏன் பிரசங்கித்துக்கொண்டிருக்கிறீர்?
## Why are you Preaching?

-J.C.Choate



உங்களால் கற்பனைபண்ணக்கூடிய ஒவ்வொன்றையும் உங்களால் கற்பனை பண்ணக்கூடாத பலகாரியங்களைக் குறித்தும் பிரசங்கிக்கின்ற அநேக பிரசங்கியார்கள் உலகத்தில் இருக்கின்றனர். நீங்களும் அவர்களில் ஒருவராக இருக்கலாம். அப்படியானால், நீங்கள் ஏன் பிரசங்கித்துக் கொண்டிருக்கிறீர்கள்?

சிலர் பணத்திற்காக மட்டுமே பிரசங்கிக்கிறார்கள் அல்லது ஜீவனத்திற்காக பிரசங்கிக்கிறார்கள் அவர்கள் எந்த சபையோடு ஐக்கியமாயிருக்கிறார்கள் என்பது குறித்து அவர்களுக்குக் கவலையில்லை, வேறு ஏதோ ஒரு சபை அதிக பணம் கொடுக்குமானால் அவர்கள் எளிதாக "நிலைமாறி" எதையெல்லாம் பிரசங்கிக்கக் கேட்டுக்கொள்ளபடுகிறார்களோ அதை பிரசங்கிக்க விருப்பம் கொள்ளுகின்றனர்.

மேலும், ஒரு குறிப்பிட்ட சமயக் குழுவோடு வளருகின்றவர்கள் அதோடு நிலைத்திருக்கும்படி விசுவாசமிக்க உணர்வுள்ளவர்களாகவும், அதற்காகப் பிரசங்கிக்கிறவர்களாகவும் கூட இருக்கின்றனர். அவர்கள் தங்கள் சபையைப் பற்றி வேதாகமத்தில் வாசிக்கமுடியவில்லை என்பது உண்மையாகயிருந்தாலும் அவர்கள் அதில் இணைந்து பிரசங்கம் செய்கின்றனர், அது மனிதனால் ஸ்தாபிக்கப்பட்டது, அது சமய சீர்திருத்தம் இயக்கம் உருவான நாட்களில் அல்லது மிக சமீபத்தில், மனித நாமங்களை தரித்திருக்கின்ற இவைகள் ஐரோப்பா, அல்லது அமெரிக்கா அல்லது இந்தியாவில் கூட இதனுடைய துவக்கத்தினைக் கொண்டிருந்தது, இரட்சிப்பிற்காகவும் அங்கத்தினரின் உரிமைக்காகவுமான இதனுடைய அறிவுரைகள் புதிய ஏற்பாட்டிலிருந்து வேறுபடுகிறது, இதனுடைய ஆராதனை முறைமைகள் புதிய ஏற்பாட்டு முறைமையிலிருந்து கூட்டி, குறைக்கிறதுமான இரண்டையும் செய்கிறது, மேலும் இதனுடைய கோட்பாடுகளில் அதிகமானவைகள் தேவனுடைய வார்த்தையில் இருக்கின்றவைகளுக்கு மாறாக மனிதனால் எழுதப்பட்ட கோட்பாடுகளில் அதிகாரம் செலுத்துபவரை சார்ந்தே உள்ளன. சில மனிதர்கள் பாரம்பரியங்களினால் மட்டும் இயங்கும் இப்பேர்பட்ட சபைகளோடு அல்லது தங்களுடைய தவறுகளின் அறியாமையினால் கட்டப்பட்டுள்ளனர்.

மற்றவர்கள் சில சமய குழுவுக்கு மாற்றப்பட்டிருப்பதினால் பிரசங்கம் பண்ணுகிறார்கள் மேலும் அவர்கள் உண்மையாக அவற்றில் விசுவாசம் வைத்து அதனுடைய போதனையையும் பணியையும் பரப்புவதில் உதவ விரும்புகின்றார்கள். அதிகமான நேரங்களில், மனித நேயம் என்ற பெயரில் சமூக சேவை செய்வதே பாவத்திலிருந்து விடுதலை அல்லது சமயக் கோட்பாட்டினை விட அதிக முக்கியத்துவப்படுத்தப்படுகிறது.

சிலர், தாங்கள் கிறிஸ்துவை தங்களுடைய இரட்சகராக ஏற்றுக்கொள்ளும் போது பற்பல பாஷைகளில் பேசவும் அற்புதங்களை செய்யவும் வல்லமையுடையவர்களாயிருக்க பரிசுத்த ஆவியின் வல்லமை தங்களுக்குக் கொடுக்கப்படுவதாக நினைத்து ஏமாற்றமடைந்துள்ளனர். அவர்கள் தனிப்பட்ட விதத்தில் எவ்விதமான அற்புதங்கள் செய்யும் வல்லமையை பெற்றிராதபோதிலும் கூட, வாக்குதத்தம் பண்ணப்பட்ட வல்லமையினால் முத்திரைப்போடப்பட்டவர்களாக உபதேசக் கோட்பாட்டினை பிரசங்கம் பண்ண ஆரம்பிக்கின்றனர்.

மேலும் மற்றவர்கள் இயற்கையாகவே நல்ல பேச்சாளர்களாக இருக்கிறபடியினால் பிரசங்கம் பண்ணி எளிதாக சிறந்த வாழ்க்கையை அமைத்துக் கொள்ளுகின்றனர். குறிப்பாக அவர்கள் வெளிநாட்டு உதவியை பெற முடிந்தால், தங்கள் உள்ளூர் சகோதரர்கள் இவர்களுக்கு உதவுவதை விட அதிகமாக சம்பாதிக்கையில் அந்த கௌரவத்தைப் பெறக்கூடியவர்களாயிருக்கிறார்கள்....அவர்கள் மேலும் செய்யும் படிக்கு அதிகமான ஊழியத்தைக் கொண்டிரார்கள். இப்படிப்பட்ட ஜனங்கள் அடிக்கடி மாய்மாலம் பண்ணுகிறவர்களாகவும் சோம்பேறியாகவும் இருக்கிறார்கள்.

இவர்கள் யாவரும் பிரசங்கியார்கள் என ஒருவராலும் சொல்லப்படமாட்டார்கள்........ இந்த சமயத்தவறுகளில் அவர்கள் இருந்தாலும் ....... அவர்கள் உண்மையற்றவர்கள், பணத்திற்கு பின்னே செல்லுகிறவர்கள், சோம்பேறிகள். வெளிநாட்டு உதவிபெறுகிறவர்கள் எல்லோருமே தங்களுடைய சகோதரரின் நன்மையை எடுத்துக் கொள்ளுகின்றனர் என்று கூறிவிடமுடியாது. கொடுக்கப்பட்டவற்றில் சிலர் குற்ற உணர்வுடையவர்களாயிருக்கின்றனர், ஆனால் அனைவரும் அல்ல.

மீண்டும் முன்னுள்ள காரியங்கள், நீங்கள் ஒரு பிரசங்கியாரா யிருந்தால், நீங்கள் ஏன் பிரசங்கித்துக் கொண்டிருக்கிறீர்கள்? என்ற வினாவினை உங்களிடம் எழுப்பியுள்ளது. பிரசங்கியாகயிருப்பதில் ஒரு தவறுமில்லை. இது உலகில் மிகமுக்கியமான பணிகளில் ஒன்று, ஒருவன் இந்த வேலையை நேர்மையுடன் செய்வானானால், இதுவே ஊழியம். துயரம் அல்லது மரணம் போன்றவற்றை சந்தித்தபோதிலும் இது

உண்மையை, நேர்மையை, தேவனிடத்திலும் அவருடைய குமாரனிலும் அன்பு செலுத்துவதை, மனிதருடைய ஆத்துமாக்களை நேசிப்பதை, சத்தியத்தைப் பிரசங்கிப்பதை, கர்த்தரிடத்திலும் அவருடைய சபையிலும் விசுவாசத்துடனிருப்பதை எதிர்பார்க்கிறது.

கிறிஸ்து தன்னுடைய நாட்களில், "ஏனெனில், அநேகர் வந்து, என் நாமத்தைத் தரித்துக்கொண்டு: நானே கிறிஸ்து என்று சொல்லி, அநேகரை வஞ்சிப்பார்கள்" *(மத்.24:5)* என எச்சரித்தார். யோவான், "பிரியமானவர்களே, உலகத்தில் அநேகங் கள்ளத்தீர்க்கதரிசிகள் தோன்றியிருப்பதினால், நீங்கள் எல்லா ஆவிகளையும் நம்பாமல், அந்த ஆவிகள் தேவனால் உண்டானவைகளோ என்று சோதித்தறியுங்கள்" *(1யோவா.4:1)* என்றான். பவுல், ".....சிலர் உங்களைக் கலகப்படுத்தி, கிறிஸ்துவினுடைய சுவிசேஷத்தைப் புரட்ட மனதாயிருக்கிறார்களேயல்லாமல் வேறல்ல: நாங்கள் உங்களுக்குப் பிரசங்கித்த சுவிசேஷத்தையல்லாமல், நாங்களாவது, வானத்திலிருந்து வருகிற ஒரு தூதனாவது, வேறொரு சுவிசேஷத்தை உங்களுக்குப் பிரசங்கித்தால், அவன் சபிக்கப்பட்டவனாயிருக்கக்கடவன். முன்சொன்னதுபோல மறுபடியும் சொல்லுகிறேன்; நீங்கள் ஏற்றுக் கொண்ட சுவிசேஷத்தையல்லாமல் வேறொரு சுவிசேஷத்தை ஒருவன் உங்களுக்குப் பிரசங்கித்தால் அவன் சபிக்கப்பட்டவனாயிருக்கக் கடவன்" *(கலா.1:7-9)* என எச்சரித்தான்.

கிறிஸ்துவினுடைய மரணம், அடக்கம், உயிர்த்தெழுதலுக்குப் பின், அவர் அப்போஸ்தலருக்கு, "......... நீங்கள் உலகமெங்கும் போய், சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள். விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்; விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான்" *(மாற்.16:16)* என கட்டளையிட்டார். பவுல் தீமோத்தேயுக்கு, "சமயம் வாய்த்தாலும் வாய்க்காவிட்டாலும் ஜாக்கிரதையாய்த் திருவசனத்தைப் பிரசங்கம்பண்ணு; எல்லா நீடிய சாந்தத்தோடும் உபதேசத்தோடும் கண்டனம் பண்ணி, கடிந்து கொண்டு, புத்திசொல்லு" *(2தீமோ.4:2)* என்றான்.

பவுல், நாம் ஒன்றைக்குறித்து பிரசங்கிக்கிறவர்களாய், போதிக்கிறவர்களாயிராமல் அதன்படி செய்கிறவர்களாயிருக்க வேண்டும் என எச்சரித்தான். அவன் ரோம கிறிஸ்தவர்களுக்கு, " இப்படியிருக்க, மற்றவனுக்குப் போதிக்கிற நீ உனக்குத்தானே போதியாமலிருக்கலாமா? களவு செய்யக் கூடாதென்று பிரசங்கிக்கிற நீ களவு செய்யலாமா? விபசாரம் செய்யக்கூடாதென்று சொல்லுகிற நீ விபசாரம் செய்யலாமா? விக்கிரகங்களை அருவருக்கிற நீ கோவில்களைக் கொள்ளையிடலாமா? *(ரோம.2:21,22)* என எழுதினான்.

மறுபடியும் பவுல், "சுவிசேஷத்தை நான் பிரசங்கித்து வந்தும், மேன்மைபாராட்ட எனக்கு இடமில்லை; அது என்மேல் விழுந்த கடமையாயிருக்கிறது; சுவிசேஷத்தை நான் பிரசங்கியாதிருந்தால், எனக்கு ஐயோ" (1கொரி.9:16) என்றான். தொடர்ந்து அவன், "நாங்கள் எங்களையே பிரசங்கியாமல், கிறிஸ்து இயேசுவைக் கர்த்தரென்றும், எங்களையோ இயேசுவினிமித்தம் உங்கள் ஊழியக்காரரென்றும் பிரசங்கிக்கிறோம்" (2கொரி.4:5) என்று சொன்னான். கொலோசெயருக்கு கிறிஸ்துவைப்பற்றி பேசுகையில் அவன், " எந்த மனுஷனையும் கிறிஸ்து இயேசுவுக்குள் தேறினவனாக நிறுத்தும்படிக்கு, அவரையே நாங்கள் அறிவித்து எந்த மனுஷனுக்கும் புத்திசொல்லி, எந்த மனுஷனுக்கும் எல்லா ஞானத்தோடும் உபதேசம் பண்ணுகிறோம்" (கொலோ.1:28) என்று பிரகடனப்படுத்தினான்.

பிரசங்கத்தின் தேவை, அதனுடைய முக்கியத்துவம், அதனுடைய நோக்கம், அதனுடைய பலன் பற்றி கர்த்தரும் அப்போஸ்தலர்களும் என்ன கூறுகின்றனர் என்பதை அறிந்து கொள்ளுகிறீர்களா? நீங்கள் எப்போர்பட்ட பிரசங்கியார்கள்? நீங்கள் என்ன பிரசங்கித்துக் கொண்டிருக்கிறீர்கள்? நீங்கள் விதைக்கிற விதை உங்களை இரட்சிக்குமா மற்றும் அவற்றிற்கு அவர்கள் பதிலளித்தால், உங்களுக்குச் செவிசாய்க்கிறவர்களை அந்த விதைகள் இரட்சிக்குமா? பிரசங்கிக்கும் பொறுப்பிலிருக்கிற நாம் ஒரு நாளில் தேவனுக்கு முன்பாக நின்று, நாம் என்ன பிரசங்கித்திருக்கிறோம் என்பதற்கு அவருக்குப் பதிலளிக்க வேண்டும் என்பதை நினைவுகூருங்கள். அவர் ஏற்றுக்கொள்வாரா அல்லது நம்மை புறக்கணிப்பாரா? (யோவா.12:48).

## பொது அறிவுச் சோதனை

1. மாநிலங்களில் உள்ள கவர்னரை நியமிப்பது யார்?
   அ) ஜனாதிபதி ஆ) பிரதமர் இ) முதல் மந்திரி
2. நின்று கொண்டு அடைக்காக்கும் பறவை எது?
   அ) காகம் ஆ) பென்குவின் இ) சிட்டுக்குருவி
3. நமது நாட்டில் மிக அதிகமாகக் கிடைக்கும் கனிமம் எது?
   அ) இரும்பு ஆ) தங்கம் இ) நிலக்கரி
4. சூரிய காந்தி மலரின் பிறப்பிடம் எது?
   அ) மத்திய அமெரிக்கா ஆ) சீனா இ) இந்தியா
5. நூற்றாண்டு கண்டதற்காக தபால் தலையில் இடம் பெற்றிருந்த இந்திய தினசரி பத்திரிகை எது?
   அ) தி டைம்ஸ் ஆஃப் இந்தியா ஆ) அமிர்த பஜார் பத்திரிகா இ) தி மெயில்


*விடைகள்*

1. ஜனாதிபதி
2. பென்குவின்
3. நிலக்கரி
4. மத்தியஅமெரிக்கா
5. அமிர்த பஜார் பத்திரிகா

பெண்கள் பகுதி

# ராஜ்யம்: பிரித்தெடுக்கப்படுதலின் செய்தி
## The Kingdom : The Message of Separation

*-Betty B. Choate*



**யோ**வான் ஸ்நானகன் வந்து பிரசங்கித்த போது, அவனது செய்தி என்னவாயிருந்தது? கிறிஸ்துவானவர் பிரசங்கிக்கத் தொடங்கின போது அவரது மையக் கருத்து என்னவாயிருந்தது? அவரது சீஷர்கள் அனுப்பப்பட்ட போது அவர்கள் எதைப் பிரசங்கிக்கும்படி போதிக்கப்பட்டார்கள்? சீஷர்கள் உலகமெங்கிலும் சென்று சுவிசேஷத்தை பிரசங்கித்தபோது அவர்களது செய்தி என்னவாயிருந்தது? அப்.8:5,12 நமக்கு விளக்கமளிக்கிறது.

"....பிலிப்பு சமாரியாவிலுள்ள ஒரு பட்டத்திற்குப் போய், அங்குள்ளவர்களுக்குக் கிறிஸ்துவைக் குறித்துப் பிரசங்கித்தான்.... தேவனுடைய ராஜ்யத்துக்கும் இயேசு கிறிஸ்துவினுடைய நாமத்துக்கும் ஏற்றவைகளைக் குறித்து, பிலிப்பு பிரசங்கித்ததை அவர்கள் விசுவாசித்த போது புருஷரும் ஸ்திரீகளும் ஞானஸ்நானம் பெற்றார்கள்".

பின்னும், இயேசு எதைக் குறித்து பிரசங்கித்திருந்தார்? "மனந்திரும்புங்கள், பரலோகராஜ்யம் சமீபித்திருக்கிறது" (மத்.4:17). சுவிசேஷத்தில் ராஜ்யத்தைக் குறித்து அதாவது சபையின் வருகையைக் குறித்து அதனுடைய மையக் கருத்தை குறித்து எத்தனை முறை குறிப்பிடப்பட்டுள்ளது? இயேசு சொன்னார், "....பரலோகராஜ்யம் அவர்களுடையது" (மத்.5:3,10); "....பரலோகராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டீர்கள்" (வச.20). அவர் கட்டளையிட்டார், "முதலாவது ராஜ்யத்தை தேடுங்கள்...."(6:33). "அனைவரும் பரலோகராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டார்கள்" (7:21). "பின்பு இயேசு சகல பட்டணங்களையும், கிராமங்களையும் சுற்றி நடந்து, ஜெப ஆலயங்களில் உபதேசித்து, ராஜ்யத்தின் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து..." (மத்.9:35,4:23).

சுவிசேஷம் குறிப்பிடுகிறது. இயேசு பரிசுத்த ஆவியின் வல்லமையினால் தமது கிரியையின் மூலம், தான் மேசியா என்று நிரூபித்தார். ஆனால் அவரது உபதேசத்தில் ராஜ்யத்தைக் குறித்து பேசிய அளவு தம்மைக் குறித்து உபதேசிக்கவில்லை! இருளின் ராஜ்யத்திலிருந்து மனிதர்களை பிரித்தெடுத்து தனது ஒளியின் ராஜ்யத்திற்குள், அவரது சபைக்குள் கொண்டுவரப் போகிற அந்த நாளுக்கு அவர் தனது சீஷர்களை ஆயத்தப்படுத்தினார்.

ஒருவனும் உலகத்திலிருந்து பிரிந்து அவரது ராஜ்யத்திற்குள் வரக்கூடிய பிரித்தெடுத்தலின் செய்தியை புரிந்து கொள்ளாமல் கிறிஸ்துவை உண்மையாக புரிந்து கொள்ள முடியாது. அவரை பின்பற்றுகிற ஒவ்வொருவரும் செல்லும் செலவைக் கணக்குப் பார்க்க வேண்டும் என அவர் எச்சரிக்கிறார் (லூக்.14:28-33). அவர்கள் ஜீவனுக்குப் போகிற வாசல் வழியாக இடுக்கமான வழியில் பிரவேசிக்க வேண்டும். "இடுக்கமான வாசல் வழியாய் உட்பிரவேசியுங்கள்; கேட்டுக்குப் போகிறவாசல் விரிவும் வழி விசாலமுமாயிருக்கிறது. அதின் வழியாய்ப் பிரவேசிக்கிறவர்கள் அநேகர். ஜீவனுக்குப் போகிற வாசல் இடுக்கமும், வழி நெருக்கமுமாயிருக்கிறது; அதைக் கண்டு பிடிக்கிறவர்கள் சிலர்" *(மத்.7:13,14)*.

கிறிஸ்துவைப் பின்பற்ற விரும்புகிறவர்கள் தங்களை உலகத்திலிருந்து பிரித்துக்கொள்ளவேண்டும். "அந்நிய நுகத்திலே அவிசுவாசிகளுடன் பிணைக்கப்படாதிருப்பீர்களாக; நீதிக்கும், அநீதிக்கும் சம்பந்தமேது? ஒளிக்கும் இருளுக்கும் ஐக்கியமேது?... ஆனபடியால், நீங்கள் அவர்கள் நடுவிலிருந்து புறப்பட்டுப் போய், அசுத்தமானதைத் தொடாதிருங்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்" *(2கொ.6:14,17)*. அவர்கள் அவரது சரீரமாகிய அவரது சபையோடும் அவரது ராஜ்யத்தோடும் இணைக்கப்பட்டவர்கள்.

## இருளின் ராஜ்யம், ஒளியின் ராஜ்யம்

மேலும், இவ்வுலகில் நீதிமான்கள் என்றும் துன்மார்க்கர் என்றும் இருவிதமான கூட்டத்தாரைக் காண்கிறோம். அவர்கள் முறையே, **கிறிஸ்துவின் ராஜ்யத்தில்** உள்ளவர்கள், இருளின் ராஜ்யமாகிய சாத்தானின் ராஜ்யத்திலுள்ளவர்கள். இப்பொழுதுதான் தேவனுடைய புத்தகத்தில் குறிப்பிடப்பட்டுள்ள இரண்டு விதமான மக்கள் கூட்டத்தைப் பற்றிய தெளிவான புரிந்து கொள்ளுதலுக்கு வந்திருக்கிறோம். மெய்யாகவே, ரட்சிப்பை தேடுகிற ஒருவன் அதற்காக கிரயத்தை செலுத்தும்படிக்கும், கிறிஸ்துவில் உள்ள ரட்சிப்பைத் தெரிந்து கொள்ளுவதற்கும் உரிய ஞானத்தை கண்டிப்பாகப் பெற்றிருக்கவேண்டும்.

சில சமயங்களில் பாவிகளோடு சுவிசேஷத்தைப் பகிர்ந்து கொள்ளும் பொருட்டு கிறிஸ்தவர்களின் ஆர்வத்தில் அவர்களை ஞானஸ்நானப்படுத்தும்படி அவசரப்படுத்தி விடுகிறது. சில சமயங்களில் தேவன் விரும்புகிறபடி போதுமான அளவு போதிக்கப்படாமலும், சீஷத்துவத்துக்குள் கொண்டு வரப்படாமலும் ஞானஸ்நானத்துக்கு உட்படுத்தப்படுகிறார்கள்.

இந்த விதமான அவசரம், துணிகரமான கட்டாயச் செயல் பாவிகளை ஊக்கப்படுத்தும் இச்செயல் ஒருவேளை அவனை

உலகத்திற்குத் திருப்பி, வசனத்திற்கு விரோதமான செயலில் ஈடுபடவைத்து விடும். இவ்விதமான காரியத்தையோ அல்லது முழுமனதோடில்லாத ஒன்றையோ அவருக்கு காணிக்கையாக்குவதற்கு தேவன் ஒரு பிச்சைக்காரர் அல்ல. வேதத்தில் கூறப்பட்டுள்ளபடி மக்களோடுள்ள அவரது செயல்பாடுகளுக்குச் செவிசாய்ப்போமானால் தேவன் எல்லோரையும் நேசித்தாலும் கூட எல்லோரும் ரட்சிக்கப்பட்டிருந்திருப்பார்கள். அவர் எதிர்பார்க்கிறதையோ, விரும்புகிறதையோ, செய்யும்படி அவர் சமரசம் செய்கிறதில்லை. ஆனபடியால் ஒரு சிலர் உலகத்தை விட்டு (அறியாமலும் இருக்கலாம், உண்மை விருப்பமில்லாமலும் இருக்கலாம்) பலமாக பிரிக்கப்பட்டு அவரது சபைக்குள் நுழைக்கப்பட்டிருக்க கூடும் என்தை நாம் அறியலாம்.

மேலும் மத்தேயு13-ல் ராஜ்யத்தை குறித்த உவமைகளைப் பற்றி சிந்தியுங்கள்.10-வசனத்தில், இயேசு என்ன காரணத்திற்காக சீஷர்களுக்கு உவமைகள் மூலம் போதித்தார்? சத்தியத்தின்மேல் அன்பில்லாதவர்கள் எவர்களோ, அவர்கள் அதைக் கண்டு கொள்ள முடியாது என்பதற்காகவே அவ்வாறு போதித்தார்!

ஐசுவரியவானாகிய வாலிப அதிகாரியோடு இயேசு இடைப்பட்ட சம்பவத்திலிருந்து, நாம் என்ன அறிந்து கொள்கிறோம்? வெளிப்படையாக, இவன் ஒரு நல்ல மனுஷன் தேவனுடைய கற்பனைகளை விசுவாசித்து அதைக் கைக்கொண்டுவந்தவன். இவனுடைய வாழ்வில் இவனது நீதியான காரியங்களை இயேசு பார்க்கவில்லை, சரி நீ சத்தியத்திற்கு சமீபமானவன் என்றும் கூறவில்லை. நான் உன்னிலுள்ள மற்ற காரியத்தை நோக்கிப் பார்ப்பேன். அவர், இல்லை 'உன்னிடத்தில் ஒரு குறைவு உண்டு' என்றார். ஆனால் அந்த வாலிபனோ, அதை சரி செய்வதற்கு மாறாக திரும்பிப் போய் விட்டான். அப்பொழுது இயேசு அவனை நேசித்த போதிலும் அவன் போகட்டும் என்று கூறினார்.

2தெசலோனிக்கேயர் 2:10-12-ல் கெட்டுப்போகிறவர் களுக்குள்ளே அநீதியினால் உண்டாகும் சகலவித வஞ்சகத்தோடும் இருக்கும் இரட்சிக்கப்படத்தக்கதாய்ச் சத்தியத்தின் மேலுள்ள அன்பை அவர்கள் அங்கிகரியாமற்போனபடியால் அப்படி நடக்கும் என வாசிக்கிறோம். இவர்கள் தேவனிடத்தில் முழுவதுமாக திரும்புவார்கள் என்ற நம்பிக்கையில் தேவன் அவர்களை தம்மிடம் சேர்த்துக் கொள்ள முயற்சிக்கிறாரா? இல்லை. பரிசுத்த ஆவியானவர், "அவர்கள் பொய்யை விசுவாசிக்கத்தக்கதாகக் கொடிய வஞ்சகத்தைத் தேவன் அவர்களுக்கு அனுப்புவார் எனக் குறிப்பிட்டுள்ளார். ஏன்? ஏனென்றால் அவர்கள் சத்தியத்தை விசுவாசிக்கவில்லை.

ஆனபடியினால், மக்கள் இதை உணர்ந்து கொள்ளுவதற்கு

மிகவும் அவசியமானவை 1.ராஜ்யம் அல்லது சபையை பற்றிய செய்தியானது கிறிஸ்துவும் அப்போஸ்தலர்களும் வந்து பிரசங்கித்தவையாகும் 2. அங்கு கர்த்தருடைய சபையாகிய ஒளியின் ராஜ்யத்திற்கும், இருளின் ராஜ்யத்திற்கும் நடுவே ஒரு பிரிவினைச் சுவர் உண்டு 3. தேவனே ஒளியிலுள்ள பரிசுத்தவான்களுடைய சுதந்தரத்தில் பங்கடைவதற்கு நம்மைத் தகுதியுள்ளவர்களாக்கினவரும் இருளின் அதிகாரத்தினின்று நம்மை விடுதலையாக்கி, தமது அன்பின் குமாரனுடைய ராஜ்யத்திற்கு உட்படுத்தினவருமாயிருக்கிறார் (கொலோ.1:18) என்பதாகும்.

## <u>வெளிப்புறம் அல்லது உட்புறம்?</u>

ஆகவே, ஒருவன் தேவனையும், கிறிஸ்துவையும், சபையையும் பற்றி கற்றபின் இரட்சிக்கப்படும்படியக்கு எதைப் புரிந்து கொண்டவனாயிருக்கவேண்டும்? கிறிஸ்தவ ஜீவியத்தைப் பற்றியதான தேவனுடைய அனைத்து வழிநடத்துதலைப் பற்றிய தெளிவான அறிவை கட்டாயம் பெற்றிருக்க வேண்டாமா? இல்லை. உண்மையாக இல்லை. அவன் இன்னும் ராஜ்யத்திற்கு வெளிப்புறத்தில் தான் இருக்கிறான். எனவே தான் ஜீவனுக்குப் போகும் பாதைக்குள் நுழையபண்ணும் வழிநடத்துதலைப் பற்றிய செய்தியானது அவனுக்குக் கடினமாகத் தோன்றுகிறது.

## <u>விசுவாசம்</u>

"விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாத காரியம்; ஏனென்றால், தேவனிடத்தில் சேருகிறவன் அவர் உண்டென்றும், அவர் தம்மைத் தேடுகிறவர்களுக்குப் பலன் அளிக்கிறவரென்றும் விசுவாசிக்க வேண்டும்" என எபிரெயர்11:6 தெளிவாகக் குறிப்பிடுகிறது.

தேவ ஞானமானது இருநிலைகளில் விசுவாசத்தைக் கொண்டு வருகிறது. 1. தேவன் உயிரோடிருக்கிறார் என்ற விசுவாசம் 2. உண்மையாய் அவரைத் தேடுகிறர்களுக்கு (தேவனுடைய கிருபைக்கு மனிதனின் பிரதியுத்தரம்) அவர் வாக்குப் பண்ணியிருக்கிற பலன் மேலுள்ள விசுவாசம் (மனிதனிடத்திற்கு வந்தடைந்துள்ள தேவகிருபை).

சுவிசேஷ புத்தகங்களில் குறிப்பிடப்பட்டுள்ளபடி நமது ரட்சிப்பில் கிறிஸ்துவினுடைய பணியின் ஞானம் அல்லது விவேகம் 1கொரிந்தியர்15:3,4-ல் ".....கிறிஸ்துவானவர் வேதவாக்கியங்களின்படி நமது பாவங்களுக்காக மரித்து, அடக்கம் பண்ணப்பட்டு, வேதவாக்கியங்களின்படி மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்து" என்று பவுலினால் சுருக்கமாக எழுதப்பட்டுள்ளது.

## <u>மனந்திரும்புதல்</u>

இயேசு, "நீங்கள் மனந்திரும்பாமற்போனால் எல்லாரும்

அப்படியே கெட்டுப்போவீர்கள்" என்றார் (லூக்.13:3). உலகத்தை வெறுத்து இடுக்கமான வாசல் வழியே உட்பிரவேசிக்க விரும்புகிற ஒருவன் பாவத்தைவிட்டு விலகி தேவனிடத்திற்குத் திரும்புவதைத் தெரிந்து கொள்வது அவசியம். ராஜ்யத்திற்குள் பிரவேசிப்பதற்கு சம்பந்தப்பட்ட காரியங்கள் எதுவென்று புரிந்துகொள்ளாத போது அவன் உண்மையாகவே அந்தத் தெரிந்து கொள்ளுதலைச் செய்யமுடியாது.

<u>அறிக்கையிடுதல்</u>

மத்தேயு10:32,33-ல் இயேசுவும், "மனுஷர் முன்பாக என்னை அறிக்கை பண்ணுகிறவன் எவனோ, அவனை நானும் பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் முன்பாக அறிக்கை பண்ணுவேன். மனுஷர் முன்பாக என்னை மறுதலிக்கிறவன் எவனோ, அவனை நானும் பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் முன்பாக மறுதலிப்பேன்" என விளக்கினார். மனம் வருந்துகிற விசுவாசி சிலுவையிலறையப்பட்ட கலிலேயரை தன்னுடைய கர்த்தராக அறிக்கையிட வெட்கப்படுகிறவனாயிருக்கக்கூடாது.

<u>ஞானஸ்நானம், புதிய பிறப்பு</u>

விவேகத்தைக் கண்டடையும்படி நிக்கொதேமு இயேசுவினிடத்தில் வந்தான். "இயேசு பிரதியுத்தரமாக: ஒருவன் ஜலத்தினாலும், ஆவியினாலும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டான் என்று மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன் என்றார்" (யோவா.3:5).

எவ்வளவு எளிதானது இந்தத் திட்டம்! இரட்சிக்கப்படும்படிக்கு எவ்வளவு குறைந்த அளவு அறிவும், கீழ்ப்படிதலும் போதுமானது!

<u>அறிவு</u>

1. தேவனின் அறிவு

2. கிறிஸ்துவின் அறிவு

3. ராஜ்யத்திற்குள், பரிசுத்த ஆவியின் மூலம் உண்டாகும் ஞானஸ்நானம் பிறப்பினுடைய அறிவு: சபை, கிறிஸ்துவின் சரீரம், உலகத்தினின்று பிரித்தெடுக்கப்பட்ட தேவனுடைய குடும்பம்.

<u>பிரதியுத்திரம்</u>

விசுவாசம்

மனந்திரும்புதல்

கிறிஸ்துவை அறிக்கையிடுதல்

ஞானஸ்நானம் (ஜலத்தினாலும் ஆவியினாலும் புதிதாக பிறத்தல்) கிறிஸ்துவுக்குள்ளும் அவரது ராஜ்யத்திற்குள்ளும்.

இன்றைய கண்டுபிடிப்பாளன் சபை ஆரம்பிக்கப்பட்ட நாளின் கூட்டத்தில் இருந்திருப்பானேயானால், அவன் இயேசு கிறிஸ்து தேவனுடைய குமாரனென்றும், அவர் உயிர்த்தெழுந்த இரட்சகர் என்றும்

பிரசங்கிக்கப்பட்ட அந்த வல்லமையான, திட்டமான பாடத்தினைக் கேட்டிருப்பான்.

அவர்களில் 'இருதயத்தில் குத்தப்பட்டவர்கள்' 3000பேர் "சகோதரே, நாங்கள் என்ன செய்ய வேண்டும்?" (அப்.2:37) என்றதை அவன் கேட்டிருப்பான்.

மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள், அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள்" (வச.38) என்று பேதுரு சொல்லியதை கேட்டிப்பான்.

இன்னும் "....அவனுடைய வார்த்தையைச் சந்தோஷமாய் ஏற்றுக்கொண்டவர்கள் ஞானஸ்நானம் பெற்றார்கள். அன்றையதினம் ஏறக்குறைய மூவாயிரம் பேர் சேர்த்துக்கொள்ளப்பட்டார்கள்" (வச.41) அப்படிப்பட்டவர்களுக்குள்ளும் அவன் இருந்திருப்பான்.

"....இரட்சிக்கப்படுகிறவர்களைக் கர்த்தர் அநுதினமும் சபையிலே சேர்த்துக்கொண்டு வந்தார்" (வச.47).

இவ்வாறாக, ராஜ்யத்தைப் பற்றிய பிரசங்கமும், உலகத்தை விட்டு வெளிவரும்படி மனிதவர்க்கத்திற்கு விடுக்கும் அறைகூவலும், தேவனுக்கென்று பரிசுத்த ஜனமாகப் பிரித்தெடுக்கப்பட்டிருப்பதும் கனிகொடுப்பதில் முழுமையடைந்து நிலைத்திருக்கிறதாகும். இது ராஜ்யத்தில் தனிப்பட்ட ஆத்துமாக்களின் பிறப்பாகும். தேவனுக்கென்று பிரித்தெடுக்கப்படும் இச்செயலானது இவ்வுலகத்தில் கிறிஸ்து வந்ததற்குரிய நோக்கமாகும். இந்த வெகுமதியைப் பெற்றுக் கொண்டபின், நாம் அதற்குப் பிரதியுத்திரமாக அவரது அழைப்பை அறிந்து, புரிந்து கொள்ள வேண்டியது அவசியமாயிருக்கிறது.

*Guduvancheri*

**எமக்கு வந்த கடிதங்களில் ஒன்று...** *15-10-08*

தி வேர்ட் ஆப் கிரைஸ்ட் ஆசிரியர் அவர்களுக்கு இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் அன்பான வணக்கங்கள்.

தங்களின் மாதஇதழ் எனக்கு தொடர்ச்சியாக கிடைத்துக்கொண்டு இருக்கிறது. நன்றி. இந்த இதழில் "முன் பின் அறியாத பாஷைகளில் பேசுதல்" என்ற தலைப்பில் எழுதப்பட்ட கருத்தானது முற்றிலும் உண்மையானது. இக் கருத்தினை நான் எப்பொழுதும் புரிந்துவைத்துள்ளேன். பல கிறிஸ்தவர்களுக்கு இப்படிப்பட்ட பாஷை பேசமுடியவில்லையே என்றும், இப்படி பேசுபவர்கள் தான் பரிசுத்த ஆவியின் வல்லமை பெற்றவர்கள் என்று எண்ணுவதும், அவர்கள் ஜெபித்தால் தான் ஜெபம் கேட்கப்படும் என்று எண்ணி அவர்களிடம் ஜெபிக்க செல்வதும் உண்டு. இந்த அன்னிய பாஷையைக் குறித்து நல்ல விளக்கம் கொடுத்தமைக்கு நன்றி. பலரும் தெளிவடைவார்கள் என எண்ணுகிறேன்.

*-J.Xavier Joseph*

# ஒன்றுக்கும் கவலைப்படாதிருங்கள்

## *Be Careful for Nothing*

*-Glory Arjunan*



அநேகக் காரியங்களைக் குறித்து கவலைப்பட்டு, கலங்கிக் கொண்டிருக்கிற அன்பான சகோதரிகளே, இதோ ஆறுதலின் தேவன் நம்மை ஒன்றுக்கும் கவலைப்படாதிருங்கள் என அன்பாய் ஆவியானவர் மூலம் திருவுளம் பற்றுகிறார். இயேசு கிறிஸ்து நேற்றும், இன்றும், என்றும் மாறாதவராயிருக்கிறார். கிறிஸ்துவின் வசனம் ஜீவனுள்ளதாயிருக்கிறது இன்றும் நம்மைத் தேற்றுகிறது.

அநேகக் காரியங்களைக் குறித்து மார்த்தாள் என்ற சகோதரி கவலைப்பட்டு கலங்கிக் கொண்டிருந்தாள். இவ்விதமாய் சஞ்சலப்படுவதற்கு இவள் இயேசுவுக்குத் தூரமானவளுமல்ல. இயேசுவை தன் வீட்டிலே ஏற்றுக்கொண்ட ஸ்திரீ. ஆனால் ஒரே முறுமுறுப்பு இவளுக்கு. "இயேசு அவளுக்குப் பிரதியுத்தரமாக; மார்த்தாளே, மார்த்தாளே, நீ அநேக காரிங்களைக் குறித்துக் கவலைப்பட்டு கலங்குகிறாய் என்றார்" (லூக்.10:41).

ஆம், சகோதரிகளே, நாமும் கூட இவ்விதமாக கவலைப்பட்டு கலங்குறிவர்களாய் தான் இருக்கிறோம். ஆனால் நாம் இயேசுவை விசுவாசித்து, அநேகருக்கு முன்பாக அறிக்கையிட்டு, ஞானஸ்நானம் பண்ணப்பட்டு அவரை நம் இருதயமாகிய வீட்டிற்குள் ஏற்றுக் கொண்டவர்கள் தான்! இருப்பினும் அஞ்ஞானிகளைப் போல (தேவனை அறியாதவர்களை) உலகக் காரியங்களைக் குறித்து கவலைப்படுகிறவர் களாகவேயிருக்கிறோம். சற்று சிந்திப்போம் இது தேவனுக்குப் பிரியமாயிருக்குமா என!

இப்பேர்பட்டவர்களை வேதம், அற்ப விசுவாசிகள் என்றும் அஞ்ஞானிகள் என்றும் அழைக்கிறது, மத்தேயு6:31,32 வரை வாசித்துப் பார்ப்போமானால் அற்ப விசுவாசிகளே! இன்றைக்கு இருந்து நாளைக்கு அடுப்பிலே போடப்படும் காட்டுப் புல்லுக்குத் தேவன் இவ்விதமாக உடுத்துவித்தால், உங்களுக்கு உடுத்துவிப்பது அதிக நிச்சயமல்லவா? ஆகையால் என்னத்தை உண்போம், என்னத்தைக் குடிப்போம், என்னத்தை உடுப்போம் என்று கவலைப்படாதிருங்கள். இவைகளை யெல்லாம் அஞ்ஞானிகள் நாடித்தேடுகிறார்கள்; இவைகளெல்லாம் உங்களுக்கு வேண்டியவைகள் என்று உங்கள் பரமபிதா அறிந்திருக்கிறார் என அழகாய் கூறப்பட்டுள்ளது.

சகோதரிகளே, இயேசுவை விசுவாசிக்கிறோம், அவரை ஏற்றுக்கொண்டோம், ஜெபிக்கிறோம், சபை கூடி வருதலை விட்டு விடாதிருக்கிறோம் என்றெல்லாம் கூறிக்கொண்டு உலகக் காரியங்களைக் குறித்து கவலைப்படலாமா? கவலைப்படுவதினால் யார் தன் சரீர அளவோடு ஒரு முழத்தைக் கூட்டுவான்? அப்படி கவலைப்படுவோமானால், நம்மில் தேவ அன்பு இல்லை என்று தான் அர்த்தம். "பூரண அன்பு பயத்தைப்புறம்பே தள்ளும்" (1யோவா.4:18). அன்பு என்பது எது? நாம் அவருடைய கற்பனைகளின்படி நடப்பதே அன்பு (2யோவா6). ஆம், அன்பு சகோதரிகளே அவரது கற்பனைகளின்படி நடப்போமானால் நிச்சயம் கவலைகள் நம்மை மேற்கொள்ளாது.

இயேசுவினிடத்தில் அன்பு கூருகிறேன் என வாயில் கூறுவது அன்பல்ல. யோவா.14:23-ல் "ஒருவன் என்னில் அன்பாயிருந்தால் அவன் என் வசனத்தைக் கைக்கொள்ளுவான்" என இயேசு கூறுகிறார். கிரியையில்லாமல் நாம் அவரிடத்தில் அன்பு கூருகிறோம் எனச் சொல்வோமானால் நம்மை நாமே ஏமாற்றுகிறவர்களாயிருப்போம். அவரிடத்தில் அன்பு கூருவோமேயானால் நிச்சயம் அவரை விட்டு எடுபடாது அவரோடு கூட நெருங்கிய ஐக்கியமுள்ளவர்களாயிருப்போம்.

இந்த மார்த்தாள் இவ்விதமாய் இருக்கும்போது பாருங்கள், இவளது சகோதரி மரியாளோ; "....இயேசுவின் பாதத்தருகே உட்கார்ந்து அவருடைய வசனத்தைக் கேட்டுக் கொண்டிருந்தாள்" (லூக்.10:39). எனவே இயேசு அவளைக் குறித்து தேவையானது ஒன்றே, மரியாள் தன்னை விட்டுடெடுபடாத நல்ல பங்கைத் தெரிந்துகொண்டாள் என்றார் (லூக்.10:42). ஆம், இவள் தெரிந்து கொண்ட இந்த நல்ல பங்காகிய இயேசுவின் பாதத்தில் அவரது வசனத்தைக் கேட்டு அதன்படி செய்வோமானால் நாம் அவரில் அன்பாய் இருக்கிறோம் என்பதை நிரூபிக்கிறவர்களாயிருப்போம். பிலி.4:6,7-ல் சொல்லப்பட்டுள்ளபடி நீங்கள் ஒன்றுக்குங் கவலைப்படாமல், எல்லாவற்றையுங் குறித்து உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும், வேண்டுதலினாலும் தேவனுக்குத் தெரியப்படுத்துங்கள். அப்பொழுது எல்லாப்புத்திக்கும் மேலான தேவசமாதானம் உங்கள் இருதயங்களையும் உங்கள் சிந்தைகளையும் கிறிஸ்து இயேசுவுக்குள்ளாகக் காத்துக் கொள்ளும். "கர்த்தருக்குள் எப்பொழுதும் சந்தோஷமாயிருங்கள்; சந்தோஷமாயிருங்கள் என்று மறுபடியும் சொல்லுகிறேன்" (பிலி.4:5).

உண்மையாய் இயேசு கிறிஸ்துவை நம் இருதயமாகிய வீட்டிற்குள் ஏற்றுக் கொண்டு, அவரது பாதத்தில் உட்கார்ந்து நம் விண்ணப்பங்களை அவர் மூலம் தேவனுக்கு தெரியப்படுத்தி, வசனத்தைக் கேட்டு, அதன்படி நடப்போமானால் உலகத்தின் கவலையை ஜெயிக்கிறவர்களாயிருப்போம். தேவன் தாமே உதவி செய்வாராக!

## வேதஅறிவுப்போட்டி எண் 98-ல் வெற்றிபெற்றவர்கள்

| | |
|---|---|
| R.கிப்ட்ராஜாமணி | -ஒட்டநத்தம் |
| M. ராமசந்திரன் | -ஒட்டநத்தம் |
| R. கஸ்தூரி | -ஒட்டநத்தம் |
| Tmt. மரகதம் திரவியம் | -கோம்பை |
| N. ஜான் செல்லையா | -மதுரை |
| K. மோகன் | -கொமாரபாளையம் |
| Dr. டேவிட் | -கள்ளிக்குடி |
| IRA. எத்திராஜன் | -சங்கரி |
| Sis. ஜாய்வாசுகி | -கோவை |
| N. கமலவேனி | -சென்னை |
| N. பாலுசாமி | -செட்டிபாளையம் |
| R. சாமுவேல் | -ஊதியூர் |
| R. பவுல் சாமுவேல் | -பிடாரியூர் |
| R. அருண்குமார் | -பிடாரியூர் |
| R. ஆனந்தன் | -கீழ்ப்பட்டு |
| G.P. ஏசையன் ராஜ் | -கோபி |
| K. மணிச்செல்வன் | -அ.பா.புதூர் |
| H. ஜோதிகாந்தம் | -போடபாறை |
| J.S. நிர்மலாஜான் | -மதுரை |

## வேதஅறிவுப்போட்டி எண் 98-ன் விடைகள்

1. கர்த்தர் -யோபு40:9
2. பவுல் -அப்.18:4
3. சாலொமோன் -நீதி.6:28
4. புருஷனிலிருந்து -1கொ.11:8
5. மறைக்குட்டிக்கும் -உன்.2:9
6. கர்த்தர் -ஏரே.10:12
7. பவுல் -கலா.1:14
8. கர்த்தராகிய ஆண்டவர்-எசே.34:15
9. உங்களில் -பிலி.2:13
10. தெளிந்தவர்களாயிருப்போம் - 1தெச.5:6

**உங்கள் கவனத்திற்கு**
சென்ற வேதஅறிவுப்போட்டி
எண் 97. கேள்வி 1-ல்
என்றவர் யார் என்று திருத்தி
வாசிக்கவும். நன்றி

## நடப்புச் செய்திகள்

☆ தமிழகத்தில் 32-வது மாவட்டமாக திருப்பூரை தலைநகரமாக கொண்டு புதிய மாவட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.

☆ திண்டுக்கல் மாவட்டத்தில் பொது இடங்களில் புகை பிடித்த 430 பேரிடம் ரூ43 ஆயிரம் அபராதம் வசூலிக்கப்பட்டுள்ளது.

☆ காஷ்மீர் தேர்தலில் 10 பேருக்கு ஒரு வாக்குச்சாவடி அமைக்கப்படவுள்ளது.

☆ வரும் 2009 ஜனவரி 1-ம் தேதியன்று 18 வயது பூர்த்தியடைந்தவர்களை வாக்காளர் பட்டியலில் சேர்ப்பதற்கு முன்கூட்டியே விண்ணப்பங்கள் பெறப்படும் என தமிழக தேர்தல் அதிகாரி நரேஷ் குப்தா தெரிவித்துள்ளார்.

☆ சந்திராயன் -1 செயற்கைக்கோள் வெற்றிகரமாக விண்ணில் செலுத்தப்பட்டது.

☆ உலக செஸ் சாம்பியன் பட்டத்தை 3வது முறையாக விஸ்வநாதன் ஆனந்த் வென்றார்.


# கிறிஸ்துவின் வசனம்

## வழங்கும் வானொலி நிகழ்ச்சி





இலங்கை ஆசிய சேவை SW 25
மற்றும் 41 மீட்டரில்
ஒவ்வொரு புதன்
மாலை 5.45 மணி முதல் 6.00 வரை
கேட்டு சத்தியத்தை அறிந்துகொள்ளுங்கள்

## கிறிஸ்துவுக்கு மற்றவர்களை ஆதாயம்பண்ணுகிறவர்களை குறித்த ஒரு வர்ணனை

அவர்களுடைய **காதுகள்** ஒரு இழந்த, மரித்துக்கொண்டிருக்கும் உலகத்திலிருந்து உதவிக்காகக் கதறும் சத்தத்திற்கு திறந்திருக்கின்றன.
அவர்களுடைய **கண்கள்** தேவனுடைய வார்த்தையை தன்னில் விதைக்கும்படி ஏற்றுக்கொள்ளும் இயல்புடைய இதயத்தை எப்போதும் தேடி அலைகின்றன.
அவர்களுடைய **உதடுகள்** தேவனுடைய மகிமையை அறிவிக்கும்படி எப்போதும் ஆயத்தமுடனும், விருப்பத்துடனுமிருக்கின்றன.
அவர்களுடைய **கைகள்** தங்களுக்காக தேவனுடைய சித்தத்தை கண்டடையும் படி எப்போதும்தேவனுடைய பரிசுத்தவார்த்தையின் பக்கங்களை புரட்டுகின்றன.
அவர்களுடைய **பாதங்கள்** சகல சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க கிறிஸ்துவின் வார்த்தைகளை சுமந்து செல்லும்படிக்கு நகருகின்றன.
அவர்களுடைய **இருதயங்கள்** காலம் கடக்கும் முன்னே இழந்து போனவற்றை சென்றடையும்படி தீவிரத்துடனே நொருங்குண்டு துடிக்கின்றன.
அவர்களுடைய **தலைகள்** ஊழியத்தை மேற்கொள்ளும்படி தங்களுக்கு ஞானம் கிடைக்கும்படி பரலோகத்தின் பிதாவை நோக்கி தலைகவிழ்ந்து ஜெபிக்கின்றன.
அவர்களுடைய **முகங்கள்** அவர்களுக்குள்ளே நம்பிக்கையோடே பிரகாசிக்கின்றன.
அவர்களுடைய **கிரியைகள்** மறைந்திருக்க மாட்டாத மலையிலுள்ள பட்டணத்தை போல **விளக்காயிருக்கிறது.**
அவர்கள் உலகத்தின் **வெளிச்சமாயிருக்கிறார்கள்.**கிறிஸ்துவுக்குள் அவர்கள் வாழ்கிறார்கள், அசைகிறார்கள், தங்களுடைய ஜீவனைப் பெற்றிருக்கிறார்கள்.

*Selected*
*-The Voice of Truth International*

## தெரிந்து கொள்ளுங்கள்

### ஒவ்வொன்றிற்கும்

பிறக்க
இறக்க
நட
நட்டதைப் பிடுங்க
கொல்ல
குணமாக்க
இடிக்க
கட்ட
அழ
நகைக்க
புலம்ப
நடனம்பண்ண
கற்களை எறிந்துவிட
கற்களை சேர்க்க
தழுவ

ஒரு காலமுண்டு

தழுவாமலிருக்க
தேட
அழ
இழக்க
காப்பாற்ற
எறிந்து விட
கிழிக்க
தைக்க
மவுனமாயிருக்க
பேச
சிநேகிக்க
பகைக்க
யுத்தம்பண்ண
சமாதானம்பண்ண

சரித்திர ஆய்வு

# சத்திய வார்த்தையில் சரித்திரம் -13

## இயேசு கிறிஸ்துவுக்குள் நிறைவேறிய பழைய ஏற்பாட்டின் தீர்க்கதரிசனங்கள்

John S.Nathan, Gospel Minister
Christian City Church of Christ, (Minjur) -601 203,
S.INDIA.
Mobile: 94444 43378



புதிய ஏற்பாட்டில் கூறப்பட்ட அப்போஸ்தலர்கள் எல்லாருமே உறுதியான திட்டத்துடன் அறிவித்தனர். நசரேயனாகிய இயேசுவே யூத இனம் எதிர்பார்த்திருந்த "மேசியா" என்பதை உறுதிப்படுத்தியதுடன் அவரின் அற்புதமான பிறப்பும், அவரால் இறுதியாக நிறைவேறிய உயிர்த்தெழுதலுமாகும். பழைய ஏற்பாடு 15 நூற்றாண்டுகளுக்கு முன்பாக மேசியாவின் பிறப்பினைக்குறித்து கூறப்பட்ட தீர்க்கதரிசனம் நம்பக்கூடிய நற்செய்தியாக நிறைவேறியது. "பொய் சொல்ல தேவன் ஒரு மனிதன் அல்ல; மனம்மாற அவர் ஒரு மனுபுத்திரனும் அல்ல; அவர் சொல்லியும் செய்யாதிருப்பாரா? அவர் வசனித்தும் (கூறியும் அதனை) நிறைவேற்றாதிருப்பாரா? எண்.23:19 (கி.மு.1452-ல் கூறப்பட்டது) தேவன், உண்மையுள்ளவர் **(GOD IS TRUTH)** (ஆதி2:2) தாம் செய்த தம்முடைய கிரியை, முழுமையான **(PERFECTION)** முற்றுப்பெற்ற மாறாத **(IMMUTABLE)** நற்செய்கைகள். "நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்" யோர்வான்14:6 என்று இயேசு சொல்லுவதற்கு முன்பாக சர்த்தானைப் பற்றியும் அவனை பின்பற்றுகிறவர்களைக்குறித்தும் "....அவன் ஆதிமுதற்கொண்டு மனுஷ கொலை பாதகனாயிருக்கிறான்; சத்தியம் அவனிடத்தில்லாதபடியால் அவன் சத்தியத்திலே நிலை நிற்கவில்லை; அவன் பொய்யனும் பொய்க்குப் பிதாவுமாயிரு கிறபடியால் அவன் பொய்பேசும்போது தன் சொந்தத்தில் எடுத்துப்பேசுகிறான் (யோவான்8:44) சாத்தானை முழுமையாபுரிந்து கொள்ள அவனின் சுயரூபத்தையும், சிந்தனையையும், செயலையும் நன்கு அறிந்தவனாக, அவனைக் குறித்து நாம் எச்சரிக்கையாயிருக்க இவ்வாறு கூறினார். அத்துடன் அவர் நமக்கு சத்தியத்தைச் சொல்லுகிறவர் வசனம்45.

### தேவனுடைய திவ்ய திட்டங்கள் எல்லாம் இனிதே நிறைவேறும்

".... நானே தேவன், வேறொருவரும் இல்லை; நானே தேவன், எனக்குச் சமானமில்லை" ஏசா46:9. அந்தத்திலுள்ளவைகளை ஆதிமுதற்கொண்டும், இன்னும் செய்யப்படாதவைகளைப் பூர்வகாலமுதற்கொண்டும் அறிவிக்கிறேன்; என் ஆலோசனை நிலைநிற்கும், எனக்குச் சித்தமானவைகளையெல்லாம் செய்வேன்"

(வசனம்10) ஏசா.48:3-4, 6:8, 65:17-18. ஆம் தேவன் நமக்காக புதியவைகளையெல்லாம் சிருஷ்டிக்கிறவர் என்பதால் அவரின் நற்செயலால் மேசியாவைக்குறித்து நாம் அவரை அறிகிறோம் என்பதை பவுலடியாரும் தாம் எழுதின ரோமர்1:4-5-ல் இயேசுகிறிஸ்துவைக்குறித்து தேவன் தம்முடைய தீர்க்கதரிசிகள் மூலமாய்ப் பரிசுத்த வேதாகமங்களில் முன்னே தம்முடைய சுவிசேஷத்தைப் பற்றி வாக்குதத்தம் பண்ணினபடி கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவானவர், மாம்சத்தின்படி பரிசுத்தமுள்ள ஆவியின்படி தேவனுடைய சுதனென்று (குமாரன்) மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்ததினாலே பலமாய் ரூபிக்கப்பட்ட தேவனுடைய குமானாயிருக்கிறார்.

**மேசியாவைக்குறித்து நிறைவேறிய தீர்க்கதரிசனம்**

இயேசு: நியாயப்பிரமாணத்தையானாலும் தீர்க்கதரிசனங் களையானாலும் அழிக்கிறதற்கு வந்தேன் என்று எண்ணிக்கொள்ளா தேயுங்கள்; அழிக்கிறதற்கு அல்ல நிறைவேற்றுகிறதற்கே வந்தேன் (மத்.5:17). மேலும் விசுவாசிக்கிற எவனுக்கும் (எனக்கும், உமக்கும், நமக்கும்) நீதிஉண்டாகும்படியாக கிறிஸ்து (வே) நியாயப்பிரமாணத்தின் முடிவாயிருக்கிறார் (ரோமர்10:4) கி.பி. 60-ல் எழுதப்பட்டது. மேலும் இயேசுவும், "மோசே முதலிய சகல தீர்க்கதரிசிகளும் எழுதின வேதவாக்கியங்களெல்லாவற்றிலும் தம்மைக்குறித்துச் சொல்லிய வைகளை அவர்களுக்கு விவரித்துக் காண்பித்தார் (லூக்.24:27) மேலும் வசனம் 44 "வேதவாக்கியங்களை ஆராய்ந்துபாருங்கள்; அவைகளால் உங்களுக்கு நித்திய ஜீவன் உண்டென்று ...என்னைக்குறித்துச் சாட்சி கொடுக்கிறவைகள் அவைகளே (யோவான்.5:39). மோசே என்னைக்குறித்து எழுதியிருக்கிறான் வசனம் 46. ஆகிலும் தீர்க்கதரிசிகள் எழுதியிருக்கிற வசனங்கள் நிறைவேறும்படி இவைகளெல்லாம் சம்பவிக்கிறது (மத்.26:56). ....இதோ, மனுஷகுமானுடைய சாயலான ஒருவர் வானத்து மேகங்களுடனே வந்தார்; அவர் நீண்ட ஆயுசுள்ளவர் இடமட்டும் வந்து, அவர் கொண்டுவரப்பட்டார் சகல ஜனங்களும் ....அவரையே சேவிக்கும்படி, அவருக்குக் கர்த்தத்துவமும் 'மகிமையும்' ராஜரீகமும் கொடுக்கப்பட்டது;.... அவருடைய ராஜ்யம் (சபை) அழியாததுமாயிருக்கும்" தானியேல்7:13,14. கி.மு.555-ல் கூறிய தீர்க்கதரிசனத்தை குறித்து மாற்கு13:26-ல் ".....மனுஷகுமாரன் மிகுந்த வல்லமையோடும் மகிமையோடும் மேகங்களின் மேல் வருவதைக் காண்பார்கள்" என்று அறிகிறோம். மேலும் இயேசு ".....இந்தக்கல்லின் மேல் என் (இயேசுவின் ) சபையைக் கட்டுவேன் என்ற சபையின் வளர்ச்சியை குறித்த தீர்க்கதரிசனம் கி.பி.30-ல் நிறைவேறியதையும் சிந்திப்போம். மேலும் லூக்4:20,21; 22:37; யோவா.15:25.

**புதிய ஏற்பாட்டின் ஆசிரியர்கள் இயேசுவை பற்றிய தீர்க்கதரிசனம் நிறைவேறியது என்பதை உறுதியான திட்டத்துடன் அறிவித்தனர்.**

1."கிறிஸ்து பாடுபட வேண்டுமென்று தேவன் தம்முடைய

தீர்க்கதரிசிகளெல்லாருடைய வாக்கினாலும் முன்னறிவித்தவைகளை இவ்விதமாய் நிறைவேற்றினார்" அப்.நடபடிகள்3:18.

2. "அவரை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் அவருடைய நாமத்தினாலே பாவமன்னிப்பைப் பெறுவானென்று தீர்க்கதரிசிகளெல்லாரும் அவரைக்குறித்தே சாட்சி கொடுக்கிறார்கள்" அப்.10:43.

3. "அவரைக்குறித்து எழுதியிருக்கிறவைகள் யாவையும் அவர்கள் நிறைவேற்றினபின்பு, அவரை (இயேசுவை) மரத்திலிருந்து இறக்கி, கல்லறையிலே வைத்தார்கள்" அப்.13:29.

4. கிறிஸ்து பாடுபடவும் மரித்தோரிலிருந்து எழுந்திருக்கவும் வேண்டுமென்றும், தான் (பவுலடியார்) உங்களுக்கு அறிவிக்கிற இந்த இயேசுவே கிறிஸ்து என்றும் காண்பித்து, திருஷ்டாந்தப்படுத்தினான்" அப்.17:3.

5. "...கிறிஸ்துவானவர் வேதவாக்கியங்களின்படி, நமது பாவங்களுக்காக மரித்து...மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்து ..." 1கொரி.15:3,4.

6. "...ஜீவனுள்ள கல்லாகிய அவரிடத்தில் (இயேசுவினிடத்தில்) சேர்ந்தவர்களாகிய நீங்களும், ஜீவனுள்ள கற்களைப்போல..... பரிசுத்த ஆசாரியக்கூட்டமாகவும் கட்டப்பட்டு வருகிறீர்கள்" என்று 1பேது.2:4,5-ல் அறிகிறோம்.

7. (அ) ஏரோது ராஜா, "பிரதான ஆசாரியர் ஜனத்தின் வேதபாரகர் எல்லாரையும் கூடிவரச்செய்து: கிறிஸ்துவானவர் எங்கே பிறப்பாரென்று அவர்களிடத்தில் விசாரித்தான். அதற்கு அவர்கள்: யூதேயாவிலுள்ள பெத்லகேமிலே பிறப்பார்; அதேனென்றால்: யூதேயா தேசத்திலுள்ள பெத்லகேமே, யூதாவின் பிரபுக்களில் நீ சிறியதல்ல; என் ஜனமாகிய இஸ்ரயேலை ஆளும் பிரபு உன்னிடத்திலிருந்து புறப்படுவார் என்று தீர்க்கதரிசியினால் எழுதப்பட்டிருக்கிறது என்றார்கள்" மத்.2:4-6.

(ஆ) "எப்பிராத்தா (செழிப்பான) அப்பத்தின் வீடு என்னப்பட்ட பெத்லகேமே, நீ யூதேயாவிலுள்ள ஆயிரங்களுக்குள்ளே சிறியதாயிருந்தும், இஸ்ரயேலை ஆளப்போகிறவர் உன்னிடத்திலிருந்து புறப்பட்டு வருவார்; அவருடைய புறப்படுதல் அநாதி நாட்களாகிய பூர்வத்தினுடையது" மீகா5:2. கி.மு.710-ல் கூறி தீர்க்கதரிசனம். கி.மு.4 ஆம் ஆண்டில் நிறைவேறியது.

**"ஸ்திரீயின் வித்து"**

மனித இனத்தின் ஆண், பெண் குழந்தைகளின் பிறப்பினை நிர்ணயம் செய்வது ஆணின் வித்தாகும் ஆனால் உலகினை மீட்க வந்த மேசியாவாகிய கிறிஸ்து இயேசுவின் பிறப்பில் சிறப்பாக செயல்பட்டது ஸ்திரீயின் வித்துவேயாகும்! அவளிடத்தில் உற்பத்தியாயிருக்கிறது பரிசுத்த ஆவியினால் (ஆணின் வித்துவினால் அல்ல மத்.1:20). ஆனால் அவரின் பிறப்பிற்கு 4004 ஆண்டுகளுக்கு முன்பே அவரின் பிறப்பினைப்பற்றி கூறும் தீர்க்கதரிசனம். "உனக்கும் (சாத்தானுக்கு)

ஸ்திரீக்கும்; உன் வித்துக்கும் அவள் வித்துக்கும் பகை உண்டாக்குவேன்; அவர் (ஸ்திரீயின் வித்துவாகிய இயேசுகிறிஸ்து உன் தலையை நசுக்குவார், நீ அவர் குதிங்காலை நசுக்குவாய்" (ஆதி.3:15) என்ற தீர்க்கதரிசனம் இதோ, ஒரு கன்னிகை கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாள்; அவருக்கு இம்மானுயேல் என்று பேரிடுவார்கள். மத்.1:23-25; லூக்.1:26-35; 2:1-11; பிலி.2:7; "காலம் நிறைவேறினபோது, ஸ்திரீயினிடத்தில் பிறந்தவரும் நியாயப்பிரமாணத்திற்குக் கீழானவருமாகிய தம்முடைய குமாரனை (இயேசுவை) தேவன் அனுப்பினார்" கலா.4:5.

எனவே இயேசு கிறிஸ்துவின் பிறப்பு மனித கற்பனையான சரித்திர ஆதாரமற்ற செயலாய் இல்லாமல், அவரின் பிறப்பு தீர்க்கதரிசனம் நிறைவேறுதலாகவும், நம்பிக்கையுள்ள நம்பத்தகுந்த நற்சாட்சியாகவும் அமைந்துள்ளது நமக்கு மாபெரும் வியப்பையும், மாபெரும் விசுவாசத்தையும் அளிக்கக் கூடியதை எண்ணி, எண்ணி தேவனைபாடி துதித்து மகிழுவோம்!

**"பிறந்தார் பிறந்தார் வானவர் புவி**
**மானிடர் புகழ் பாடிட பிறந்தார்**
**மாட்டுத்தொழுவம் தெரிந் தெடுத்தார் மாதேவ தேவனே"**
என்று அகமகிழ்ந்து பாடிடுவோமாக!

**மீஞ்சூர் கிறிஸ்துவின் சபையார் கூடுமிடத்தில்**
**2009 ஆம் வருடத்திற்கான பிரசங்கியார்களின்**
**ஆயத்தக்கூட்டம்**
**இக்கூட்டத்திற்காக ஜெபிப்பீர்களா!**

**திருப்பூர் மாவட்டம் 32 வது கிறிஸ்துவின் வசனம் வாசகர் கருத்தரங்கு மற்றும் சுவிசேஷகூட்டத்தில் கலந்து கொண்டவர்கள்**

தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்

OCTOBER



2008

THE WORD OF CHRIST

**தமிழகத்தின் 32 வது புதிய மாவட்டம் திருப்பூர்**



# தொற்காள்

சிறுவர் பகுதி

**வேதபகுதி:**
**அப்போஸ்தல நடபடிகள் 9:36-42**

சீஷர்களை குறித்து வேதாகமத்திலே அதிகமாக படிச்சிருப்பீங்க! இல்லையா, ஆனால் சீஷிகளைக் குறித்து படிச்சிருக்கமாட்டீங்க. ஆதலால இன்றைக்கு யோப்பா பட்டணத்திலே வாழ்ந்த தொற்காள் என்ற தபீத்தாளைப்பற்றி உங்களுக்கு சொல்லப்போறேன். ஒரு சீஷன் எப்படி இருக்கவேண்டும். குருவைப்போல இருக்கவேண்டும். இந்த சீஷிகூட அப்படித்தான் இருந்தாங்க. ஆண்டவர் போதனைப்படி நடக்க ஒரு நாளும் தவறமாட்டாங்க இயேசு என்ன சொன்னாரோ அப்படியே நடந்தாங்க. நல்லதே செய்வது, இல்லாதவர்களுக்கு கொடுத்து உதவுவது போன்ற அநேக தருமங்களை மிகுதியாக் செய்து கொண்டு வந்தாங்க. ஒரு சமயம் அவங்க வியாதிப்பட்டு வியாதியிலிருந்து குணமாகாம செத்துப்போயிட்டாங்க. உடனே செத்தவங்களை என்ன செய்வாங்க, குளிப்பாட்டி வைப்பாங்க இல்லையா? அப்படியே இந்த தொற்காளையும் குளிப்பாட்டி மேல் வீட்ல கொண்டுபோய் வச்சாங்க. பின்பு பேதுருவைப் பார்த்த விதவைகளெல்லாரும் அழுது கொண்டு தொற்காள் தங்களுடனேகூட இருக்கும்போது செய்திருந்த அங்கிகளை கொண்டு வந்து காண்பித்தாங்க.

பேதுரு என்ன செய்தாரு தெரியுமா? எல்லோரையும் வெளியே போகச் சொல்லி முழங்காற்படியிட்டு ஜெபம் பண்ணி, பின்பு பிரேதத்தின் புறமாய்த்திரும்பி தபீத்தாளே, எழுந்திரு என்றார் அவ்வளவு தான் அவள் தன் கண்களை திறந்து எழுந்து உட்கார்ந்தாள். என்ன ஆச்சரியம் பார்த்தீர்களா!

இந்த தெற்காள் என்னும் தபீத்தாளைப்போல நாமும் தானதர்மம் பண்ணவேண்டும். அது மாத்திரமல்ல நற்கிரியைகளையும் செய்யவேண்டும். ஏனென்றால் "நற்கிரியைகளைச் செய்கிறதற்கு நாம் கிறிஸ்து இயேசுவுக்குள் சிருஷ்டிக்கப்பட்டு, தேவனுடைய செய்கையாயிருக்கிறோம். அவைகளில் நாம் நடக்கும்படி அவர் முன்னதாக அவைகளை ஆயத்தம் பண்ணியிருக்கிறார்" (எபே.2:10). நல்லது தம்பி, தங்கைகளே மீண்டும் அடுத்த இதழில் கர்த்தருக்குச் சித்தமானால் சந்திப்போம்.

**மனப்பாட வசனம்:**
"தகுதியான வஸ்திரத்தினாலும், நாணத்தினாலும், தெளிந்த புத்தியினாலும், தேவபக்தியுள்ளவர்களென்று சொல்லிக்கொள்ளுகிற ஸ்திரீகளுக்கு ஏற்றபடியே நற்கிரியைகளினாலும், தங்களை அலங்கரிக்க வேண்டும்" - (1தீமோத்தேயு2:10)

# வேத அறிவுப் போட்டி
## எண் 99

**போட்டியாளர்கள் கவனத்திற்கு,**

**கீழ்க்கண்ட பத்து கேள்விகளுக்கும் வசன ஆதாரத்துடன் 50 பைசா தபால் கார்டில் இம்மாதம் 25ம்தேதிக்குள் எமக்கு வந்து சேரும்படி எழுதி அனுப்பிவையுங்கள். இருபது வயதுக்கு மேற்பட்டவர்கள் இப்போட்டியில் கலந்துகொள்ளலாம். பதிவு எண்ணுடன் உங்கள் முழு முகவரியை தெளிவாக எழுதவும்.**

1. என் கண்கள் எப்பொழுதும் கர்த்தரை நோக்கிக்கொண்டிருக்கிறது என்ற தாசன் யார்?
2. நியாயப்பிரமாணம் கொடுக்கப்படுவதற்கு முன்னும் பாவம் உலகத்திலிருந்ததா?
3. கற்பனையைக் கைக்கொள்ளுகிறவன் எதை அறியான்?
4. நாங்கள் எப்பக்கத்திலும் நெருக்கப்பட்டும் ஒடுங்கிப்போகிறதில்லை; என்ற அப்போஸ்தலன் யார்?
5. துன்மார்க்கனுக்குத் தயைசெய்தாலும் எதைக் கற்றுக்கொள்ளான்?
6. நாம் நம்முடைய வழிகளைச் சோதித்து, ஆராய்ந்து, யாரிடத்தில் திரும்பக்கடவோம்?
7. கிறிஸ்துவினுடைய ஈவின் அளவுக்குத்தக்கதாக நம்மில் அவனவனுக்கு எது அளிக்கப்பட்டிருக்கிறது?
8. எங்கள் தேவனாகிய ஆண்டவரிடத்தில் இரக்கங்களும் மன்னிப்புகளும் உண்டு என்ற தாசன் யார்?
9. நீங்கள் கிறிஸ்துவுடன்கூட எழுந்ததுண்டானால் கிறிஸ்து தேவனுடைய வலதுபாரிசத்தில் வீற்றிருக்கும் இடத்திலுள்ள மேலானவைகளைத் தேடுங்கள் என்ற அப்போஸ்தலன் யார்?
10. அக்கிரமத்தின் இரகசியம் இப்பொழுதே கிரியை செய்கிறது ஆனாலும் தடைசெய்கிறவன் நடுவிலிருந்து நீக்கப்படுமுன்னே அது என்னவாகாது?

**"ஜெயங்கொள்ளுகிறவன் எல்லாவற்றையும் சுதந்தரித்துக்கொள்ளுவான்; நான் அவன் தேவனாயிருப்பேன், அவன் என் குமாரனாயிருப்பான்" (வெளி. 21:7)**

Owned and published by B. Arjunan from 17.2.102 D/5, Rajan nagar, Batlagundu - 624 202 and printed by R. Sathiyamoorthy at Bharathi Press, 14/13/24 Melamanthai Street, Batlagundu - 624 202.
Editor : B. Arjunan.

**BATLAGUNDU**

**CHURCH OF CHRIST**

MEETS HERE

*17-2-102 D/5, RAJAN NAGAR.*
*BATLAGUNDU-624 202, DINDIGUL DIST*



Phone:4543 263278,
Mobile: 9443558041
e-mail: thewordofchrist@sancharnet.in

ஆராதனை நேரம் ஞாயிறு காலை 8.30 மணி
தேவனை ஆவியோடும், உண்மையோடும்
தொழுது கொள்ள யாவரையும் அன்புடன் அழைக்கிறோம்

உங்கள் வானொலியில்
இலங்கை ஆசிய சேவை SW 25 மற்றும் 41 மீட்டரில்
ஒவ்வொரு புதன் மாலை 5.45 முதல் 6.00 மணி வரை
கேளுங்கள் மேலும்

உங்கள் தொலைக்காட்சியில்

**TAMILAN TV** - Every Monday 6.00 a.m.
**IMAYAM TV** - Every Tuesday 6.30 a.m.
**IMAYAM TV** - Every Thursday 6.15 a.m.

மாத இதழ் மற்றும் வேதபாடம்
தேவைக்கு உடனே ரூ.15/–
அனுப்பி பெற்றுக்கொள்ளவும்

**T.V & Radio** –வில் வெளி வந்த
தேவ செய்திகள் அடங்கிய CD&DVD - க்கள்
தேவைப்படுவோர் ரூ.100/– அனுப்பி பெற்றுக்கொள்ளவும்.
**சகலத் தொடர்புக்கும்**

**R.N.I. No. TNTAM/2000/3629 Postal Registration. No. DDL / 164/2006-2008 Licensed to Post Without Pre-Payment License No. TN/WPP-25/SR 2006-2008 Posted at Batlagundu Post Office on 10th Nov.2008.**

Monthly Magazine

To

From

*Editor*
THE WORD OF CHRIST
*P.O. Box No.5,*
*Batlagundu - 624 202*
*S.India.*